| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **06/04/2024** | முதல் | **10/04/2024** | |
| | அறிக்கை எண் : | **028/ 2024** | வெளியீட்டு நாள் : | | **05/04/2024** | | |

### சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை (31.03.2024 முதல் 04.04.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –10-04-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31/03 | 01/04 | 02/04 | 03/04 | 04/04 | தேதி | நாள்-1 06/04 | நாள்-2 07/04 | நாள்-3 08/04 | நாள்-4 09/04 | நாள்-5 10/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 39 | 39 | 39 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 39 | 39 | 38 | 38 | 39 |
| 25 | 27 | 27 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 26 | 27 | 27 |
| 2 | 4 | 3 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 3 | 4 | 0 | 3 |
| 63 | 65 | 63 | 73 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 80 |
| 35 | 42 | 39 | 38 | 41 | | 20 | 20 | 20 | 30 | 30 |
| 5 | 12 | 12 | 7 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 14 | 14 | 16 | 14 |
| தென் மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **கிழக்கு** |

### குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27°செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 14 முதல் 16 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (05 முதல் 18 ஏப்ரல் 2024):**

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் பொதுவாக குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை விட அதிகரித்து காணப்படும். 38° செல்சியஸ் முதல் 40° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை விட சற்று குறைவாக காணப்படும். 32° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது சற்று அதிகரித்து காணப்படும்.20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது சற்று குறைவாக காணப்படும்.20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு (06.04.2024 முதல் 09.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 14 முதல் 16 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : கரும்பு, மிளகாய், கால்நடை**

**கரும்பு:**

வட்ட வடிவ பூச்சிகள் கரும்பின் கணுக்களுக்கு கீழே இலைப் பரப்புகளின் அடியில் காணப்படுகின்றன. வெள்ளை நிற மாவுத்துகள்கள் கரும்பின் வளர்ச்சியைக் குறைப்பதோடு வேரினையும் பாதிக்கின்றன.

இதனால் கட்டைக் கரும்புகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன. தேன் போன்ற திரவத்தின் மேல் கரும்பூசனப் படலம் உருவாகிக் கரும்பு கருநிறமாகக் காட்சி அளிக்கும். இலைகள் மஞ்சள் நிறத்தில் தோற்றமளிக்கும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 100மில்லி மீன் எண்ணெய் மற்றும் 35மில்லி ரெசின் சோப்பு கலந்து தெளிக்க வேண்டும்.

பூச்சியின் தாக்குதல் தீவிரமாக இருக்கும் பட்சத்தில் ரசாயண முறையில் இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 35 கிராம் என்ற அளவில் புப்ரோபெசின் + அசிபேட் கூட்டு மருந்தினை தெளிக்கவும்.

**மிளகாய்:**

காய்கறிப் பயிர்களுக்கு நுண்ணூட்டம் உரமிடுதல் நல்ல பயனளிக்கும்.

பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள காய்கறி பயிர்களுக்கு நுண்ணூட்டத்தை நீர்பாசனம் வழி விடுதல் அல்லது இலை வழியாக தெளிக்கவும்.

**கால்நடை:**

நிலவும் அதிகரித்த உயர் வெப்பநிலையை கருத்திற் கொண்டு தங்களது கால்நடைகளுக்கு தமிழ்நாடு கால்நடை பல்கலைக் கழத்தின் தானுவாஸ் தாதுக் கலவையினை ஒரு நாளைக்கு ஒரு கால்நடைக்கு 50 கிராம் என்ற அளவில் தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

மேலும் இவ்வெப்பக் காலத்தினை தாங்கும் பொருட்டு கால்நடைகளுக்கு தேவையான அளவு சுத்தமான தண்ணீரைக் கொடுக்கவும்.